**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.**

**O.S No.124/2016** **Date:20.03.2024**
**(D.W– 1)**

திரு.லோகநாதன் த/பெ.சுப்பிரமணி
**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைதொடர்ச்சி</u>**:
சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1. என் அப்பா பெயர் சுப்பிரமணி. எத்தனை ஆண்டுகளாக கிராம தண்டலாக இருந்தார் என்றால், தெரியாது. எனக்கு 54 வயதாகிறது. நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை என் அப்பா தண்டலாக இருந்தார் என்றால், தெரியாது. என் அப்பா எப்போது ஓய்வு பெற்றார் என்றால், தெரியாது. என் அப்பா எப்போது இறந்தார் என்றால், 2012 ல் இறந்தார். தேதி தெரியாது. பிரச்சனைகுரிய இடத்தின் அளவு என்ன என்றால், கிழபுறம் தென்வடல் 9 அடி, மேபுறம் 1 மீட்டர், கோவை–ஈரோடு ரோடு ஒட்டி 34 அடி ஆகும். கோவை–ஈரோடு ரோட்டிற்கு தென்புறமாக உள்ளது என்றால், சரிதான். திருப்பூர்–குன்னத்தூர் ரோட்டிற்கு கிழபுறமாக உள்ளது என்றால், சரிதான். என் சொத்திற்கு தென்புறமாக வாதியின் கட்டிடம் உள்ளது என்றால், சரிதான். வழக்கில் குறிப்பிடட்டுள்ள அட்டவணை சொத்துகளை நான் படித்துப்பார்க்கவில்லை.

2. என்னுடைய இடம் ஒத்தை டாப் போட்டது என்றால், சரிதான். தென்புற சுவற்றில் கொய்ய கட்டை கல் கொடுத்து ஒத்தை டாப்பை இறக்கி உள்ளேன் என்றால், சரியல்ல. சுவற்றின் மீது தான் மூங்கில் வைத்து இறக்கப்பட்டுள்ளது. தென்புற சுவற்றின் உயரம் என்ன என்றால், கடைக்கு மேல் உயரம் இல்லை, ஒத்தை டாப்புடன் முடிந்துவிட்டது. நீதிமன்ற ஆணையாளரை வைத்து பார்வையிடலாமா என்றால், பார்வையிடலாம். வாதியின் வீட்டு சுவற்றில் வடபுற சுவற்றில் தான் கல்பதித்து வாதியின் முன்னோர்கள் கூரை போட்டுள்ளார்கள் என்றால், சரியல்ல. அது நாங்கள் போட்டதாகும். மணியகாரர் முத்துசாமி கவுண்டரை எனக்கு தெரியுமா என்றால், தெரியும். என் அப்பா பரம்பரை நாவிதர் குடும்பம் என்றால், சரிதான். மணியக்காரர் குடும்பத்தில் பரம்பரையாக என் அப்பா ஊழியம் பார்த்து வந்தார் என்றால், சரியல்ல. சொத்து சம்பந்மாக வாதிகள் தாக்கல் செய்த ஆவணத்தை நான் படித்துப்பார்க்கவில்லை.

3. என் அப்பா பெயருக்கு எப்போது பட்டா வாங்கினோம் என்றால், 1990 ல் நத்தம் பட்டா வாங்கினோம். அதற்கு முன்பாக தாவா சொத்தை பொறுத்து பத்திரம் உள்ளதா என்றால், இல்லை. பூர்வீகமாக இருந்து வந்தோம். பட்டாவை அரசாங்கம் ரத்து செய்ததா என்றால், ரத்து செய்யவில்லை. பட்டாப்படி என் அப்பா 01.12.1993 ல் தான செட்டில் மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால், சரிதான். மின் இணைப்பு எப்போது வாங்கப்பட்டது என்றால், 1990 என்று நினைக்கிறேன். மின் இணைப்பு எண் 290. பட்டாவாங்குவதற்கு முன்பாக மின் இணைப்பு இருந்தது. நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீதுகள் 2006, 2007 இருந்து தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. 1989 வரி ரசீதை கொடுத்துள்ளேனா என்று கேட்டால், இல்லை. திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றதில் கொடுத்துள்ளேன். திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கு என்ன ஆனது என்றால், வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. துரைசாமி கவுண்டர் போட்ட வழக்கில் சாட்சி விசாரித்தார்களா என்றால், இல்லை.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுகிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2024.03.20 18:50:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.